# பொதுக்காலம் 11ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

“விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது” என்று அறைகூவல் விடுத்து ஆயர்களை அழைத்து ஆடுகளை மீட்க அழைக்கும் பொதுக்காலம் 11ஆம் ஞாயிறுத் திருப்பலிக்கு அன்புடன் அழைக்கிறோம்.

தன் ஆவியைக் கொடுத்த இயேசு கிறிஸ்து இப்போது தனது ஆற்றலையும் சீடர்களுக்குக் கொடுத்து அற்புதச் செயல்களை நிகழ்த்த தம் சீடர்களைப் பணிக்கிறார். எதிர்நோக்கும்போது இறையாசீரையும் பெற்றுக் கொள்ளலாம். இறை விருப்பத்தையும் நிறைவேற்றலாம்.

இறைவனின் வார்த்தைக்கு செவிசாய்க்கும்போது அவரது கட்டளைகளை கடைப்பிடிப்போர் இறைவனுக்குச் சொத்து என்பதை முதல் வாசகமாகவும் எடுத்துரைக்கிறது இறைவார்த்தைகள். வரிவடிவத்தோடு நின்று விடாமல் அவற்றை செயல்வடிவமாக்கிடுவோம். இறைவனின் தூய மக்களினமாக வாழ முயல்வோம்.

நேர்மையற்று, இறைப்பற்று அற்றவராய் இருக்கும் போதே இயேசு கிறிஸ்து நமக்காக உயிரையே தந்து உலகத்தை மீட்டார் என்பதை இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கிறது.

இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை

இரக்கத்துடன் இருப்போம்,

என்ற புனித அன்னை தெரசாவின் பொன்மொழிகளுக்கிணங்க இயேசு போல

உயிரைக் கொடுக்காவிடினும்

உள்ளதைக் கொடுப்போம்.

தன்னையே கொடுக்காவிடினும்

தன்னிடமுள்ளதை கொடுப்போம்.

“அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு” என்று ஆயரில்லா ஆடுகள் மீது பரிவு கொண்டு அவர்களை வழிநடத்த ஆயர்களை அழைக்கிறது. இன்றைய நற்செய்தி வார்த்தைகள்.

காணாமற் போன ஆடுகள் மீதே இறைவன் கவனம் கொள்கிறார். வழிதவறிய ஆடுகளை சரியான பாதைக்கு வரவே அழைக்கிறார். அவ்வழைத்தலுக்காக, சரியான ஆயர்களை எதிர்பார்க்கிறது இறை உள்ளம். விவிலிய வார்த்தைகளை வீதிதோறும் நின்று முழங்குவது மட்டுமல்ல நற்செய்திப்பணி. இறைவார்த்தைகள் இல்வாழ்க்கையிலும் இவ்வுலக வாழ்க்கைகளிலும் செயல்களாக்கப்படும்போது ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் மீட்புச் செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறது.

சொல்லுதல் யாவர்க்கும் எளியவாம் அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்.

என்பது குறள்.

சொற்களை விட செயல்கள் கடினமானவை. அவற்றிலும் நற்செயல்கள் மிக கடினமானவை. நம் வாழ்வில் நற்செயல்களைச் செய்து, குடும்பமாக, குருவாக இறையாட்சியை இவ்வுலகிற்கு வெளிப்படுத்த வரம் கேட்டு இப்பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் உம் ஊழியரான திருத்தந்தையை ஆசீர்வதித்து வழிநடத்தும். அவருக்கு நல்ல உடல், உள்ள, ஆன்ம நலம் தந்து தம் மந்தையைக் கூட்டிச் சேர்க்கும் வலிமை தந்து உடனிருந்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நன்மைகளின் நாயகரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் இளைஞர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, சிறந்த திட்டங்களை மேற்கொள்ளவும், வேலைவாய்ப்புகள் பெருகிடவும், மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திடவும், முயற்சிகளை மேற்கொண்டு, நாட்டின் வளர்ச்சியில் அக்கறை உடையவர்களாய் திகழ்ந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. பேரருட்சுடரே எம் இறைவா!

திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இம்மாதத்தில் நாங்கள் இயேசுவின் திரு இருதய நேசத்திற்கு தகுதி உள்ளவர்களாய் திகழ்ந்திடவும், எங்கள் குற்றங்குறைகளை ஏற்றுக் கொண்டு மனம் திருந்தி வாழ்ந்திடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4 அன்புருவாம் எம் இறைவா!

மறைக்கல்வி மலர்களாகிய நாங்கள் அனைவரும் உம்மைப் போன்று அறிவிலும் ஞானத்திலும் சிறந்து பெற்றோருக்கும், பெரியோர்களுக்கும் கீழ்ப்படிந்து அனைவரையும் அன்பு செய்து வாழும் பரந்த மனத்தைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. கருணை மழையே எம் இறைவா!

நாட்டில் நல்ல மழை பொழியவும், அதன் மூலம் விவசாயம் செழிக்கவும், கால்நடைச் செல்வங்கள் பெருகிடவும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும், நாடு செழிக்கவும் அருள் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

நன்றி : ஆசிரியை. திருமதி. சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com